# கருப்பூர்த் தல வரலாறு

## முன்னுரை

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஒருவனே ஆதியும் அந்தமும் இல்லாதவன். ஊழிக் காலங்களிலும் தான் ஒருவனே நிலைத்து நிற்பவன். எனவே, "ஆக்கம் அளவு இறுதி இல்லாய் " என்று சிவபுராணம் இத்தனித்துவத்தை, பரத்துவத்தைக் குறிப்பிடுகிறது. எல்லா உலகங்களுக்கும் சிவபரம்பொருளே கருவாகவும், கண்ணாகவும் விளங்குவதைத் திருநாவுக்கரசரும் , " வித்தாம் முளையாகும் வேரே தானாம் " என்றும், " கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும் கண்ணாம் " என்றும் பாடுவதைக் காணலாம். உயிர்கள் மேல் காட்டும் கருணையின் பொருட்டுத் திருக்கோயில்களில் எழுந்தருளி அருள் பாலிக்கிறான் பெருமான். பல தலங்களில் சுயம்புவாகக் காட்சி அளித்து வேண்டுவார் வேண்டியதை முற்றும் அருளும் வள்ளலாகக் கருணை புரிகிறான்.

அடியார்கள் வேண்டுவதை முன்னமே அறிந்தவன் என்பதால் சொன்னவாறு அறிவார் என்று சுவாமிக்குத் திருத்துருத்தி ( குத்தாலம்) என்ற ஊரில் பெயர் வழங்கப்படுகிறது. பண்டைப் பழ வினைகளை உயிர்கள் களைய வேண்டுமானால் அவ்வினைப் பயன்களை அனுபவித்தே ஆக வேண்டி இருக்கிறது.எல்லாப் பிறப்பும் பிறந்து அல்லல் பட வேண்டி இருக்கிறது. இப்பிறவிக்கடலிலிருந்து நாம் விடுபட, பவரோக வைத்திய நாதனாகிய பரமேசுவரனையே சரண் அடைய வேண்டும். ஆகவேதான் அவனிடம் நம் குறைகளை முறையிடுகிறோம். " வேண்ட முழுதும் தரும் " வதான்யேச்வரனிடம் முறையிடுவதுதானே முறையும் கூட!

அடியார்களுக்கும் பல துன்பங்கள் இருக்கலாம். மகான்கள் மட்டுமே துன்பத்தைக் கண்டு அஞ்சாதவர்கள். சாதாரண மனிதர்களோ, துன்பம் வந்தபோது கலங்கி விடுவார்கள். நல்வினைப் பயன் இருந்தால் அவர்களுக்கு இறைவனிடம் முறையிடும் பேறு கிட்டும். அதன் மூலம் துன்பத்திலிருந்து விடுபடுவர்.

தற்காலத்தில் பல பிரச்சினைகளால் பலர் அவதிப் படுகிறார்கள். உடல் நலக் குறைவு, கடன் தொல்லை, உரிய காலத்தில் திருமணம் ஆகாமை, பிள்ளைப் பேறு இன்மை, எதிரிகளால் பகை முதலியவை இவற்றில் அடங்கும். செய்வது அறியாத பலர் ஜோதிடர்களை அணுகிப் பரிகாரங்கள் கேட்கின்றனர். நவக்கிரகங்களை நியமித்து நம் நல்வினை- தீவினைக்கேற்ப பலன்களைத் தரும் அகிலாண்ட நாயகனாகிய சிவபெருமானை வணங்காது செய்யும் எந்த வழிபாடும் கோரிய பலனைத் தராது என்பதைப் புராணங்களால் அறிகிறோம்.

அனைத்து சிவத்தலங்களும் வேண்டிய அனைத்தையும் அருளுபவை என்றாலும் குறிப்பிட்ட சில தலங்களை அணுகித் தமது துன்பங்கள் தீர வேண்டிப் புராணங்கள் காட்டும் வழியில் அத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு, அதன் பயனாகத் தங்களது துன்பங்கள் நீங்கப் பெறுகின்றனர். எடுத்துக் காட்டாகத், திருமணம் விரைவில்

நடைபெற  வேண்டுவோர் திருமணஞ்சேரிக்கும், நோய் நீக்கம் வேண்டுவோர் வைத்தீஸ்வரன் கோயிலுக்கும், சுகப்பிரசவம் ஆக வேண்டுவோர், திருக்கருகாவூருக்கும்,திருச்சிராப்பள்ளிக்கும் வேண்டிக்கொள்வது உண்டு.

புத்திர பாக்கியம் வேண்டுவோர், திருவெண்காடு சென்று அங்குள்ள முக்குளங்களில் நீராடி, மும்மூர்த்திகளை தரிசிப்பது வழக்கம். அவ்வாறு தரிசித்ததால் சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்டார் அவதரித்ததாகப் புராணம் கூறும். இத்தலத்தின் மீது சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் இப்பலனை உறுதி செய்வது மேலும் சிறப்புடையது ஆகும்.

கர்பத்திலுள்ள சிசு நன்றாக வளரவும் சுகப் பிரசவம் ஆகவும்  திருக்கருகாவூரில் உள்ள சுவாமி-அம்பாளைப்  பிரார்த்தனை செய்வதும் திருச்சிராப்பள்ளி மலைக் கோயிலில் உள்ள தாயுமான சுவாமியைப்  பிரார்த்தனை செய்வதும்  வழக்கத்தில் இருக்கிறது.

சென்ற ஆண்டு ஆடுதுறைக்கு 7 கி.மீ. தொலைவிலுள்ளதும்,தேவார வைப்புத் தலமுமான பேராவூர் சிவாலயத் திருப்பணியை மேற்கொண்டபோது,அதன் அண்மையிலுள்ள கருப்பூர் என்ற ஊரின் சிவாலயம் இடிந்து கிடக்கக் கண்டு பெரிதும் வருந்தி, அன்பர்களது ஆதரவுடன் திருவாதிரையான் திருவருட் சபை ( Ardhra Foundation ) அதனைத் திருப்பணி செய்து கும்பாபிஷேகத்தில் பங்கு பெறும் பேற்றை அடைந்தது . வேண்டுபவர்க்குப் பிள்ளை வரம் தரும் பிரார்த்தனைத் தலமான இத் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் 2.2.2015 அன்று மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்வைபவத்தை ஒட்டி அன்பர்கள் பயன் பெறும் பொருட்டு இச்சிறுநூல் அச்சிட்டு வழங்கப்பெறுகிறது. இதனைக் கண்ணுறுவோர் பிறருக்கும் இதன் சிறப்பை எடுத்துரைத்து, எல்லா நலன்களும் பெற வேண்டுகிறோம்.

சென்னை

2.2.2015

அடியேன் ,

சிவபாதசேகரன்

திருவாதிரையான் திருவருட் சபை

தொடர்புக்கு: 9840744337

## தலமும் இருப்பிடமும்

*தெய்வப் பொன்னி நதி பாய்வதால் நில வளமும் நீர் வளமும் பெற்று விளங்கும் சோழ நாட்டில், காவிரி மற்றும் அதன் உப நதிகளின் இரு கரைகளிலும் அமைந்துள்ள சிவாலயங்கள், இப் பகுதியை தெய்வத் தன்மை வாய்ந்ததாகவும் சிவ ராஜ தானி எனவும் ஆக்கியுள்ளமை திருவருள் பற்றியே ஆகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் திருவிடைவாய் உட்பட 275 ல் 191 தலங்கள் சோழநாட்டிலேயே அமைந்துள்ளமை காண்க. இது தவிரவும் முழுப் பதிகங்கள் கிடைக்கப்பெறாமல் தலத்தின் பெயரை வேறொரு தலத்தின் பதிகத்தில் குறிப்பிட்டால் அதனை வைப்புத் தலம் எனக் குறிப்பிடுவர். பிற தலங்களின் மீது பாடிய பதிகங்கள் கிடைக்காதமையால் அப் பழம் திருக் கோயில்களைப் பாடல் பெறாத கோயில்கள் என்று கூறுவது தவறு. இவ்வாறு, வைப்புத் தலங்களாகவும் , பாடல் கிடைக்காத தலங்களாகவும் அமைந்துள்ள சிவாலயங்களும் சோழ வள நாட்டில் ஏராளமாக இருக்கக் காண்கிறோம்.*

*இப் புண்ணிய பூமியில் அமைந்துள்ள சிவாலயங்களுள் கருப்பூரில் அமைந்துள்ள சிவாலயமும் மிகப் பழமை வாய்ந்ததாகும். மயிலாடுதுறையிலிருந்து வருவோர்கள் , குத்தாலம் வழியாக S. புதூர் செல்லும் நகரப் பேருந்தில் ஏறி , கருப்பூர் சிவாலயத்தின் அருகிலேயே இறங்கலாம். பேருந்து வசதி அடிக்கடி இல்லாததால் குத்தாலத்திலிருந்து ஆட்டோவில் வரலாம். வழியில் உள்ள பழைய கூடலூர் , மேக்கிரிமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள சிவாலயங் களையும் தரிசிக்கலாம். கும்பகோணம்,அணைக்கரை ஆகிய ஊர்களிலிருந்து வந்தால் ஆடுதுறை வழியாக ஆட்டோவில் வரலாம். அவ்வாறு வந்தால்,வழியிலுள்ள சாத்தனூர்,பேராவூர் ஆகிய ஊர் சிவாலய தரிசனம் செய்யலாம். மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியிலுள்ள திருவாலங்காட்டில் இறங்கி ஆட்டோவில் பயணித்தால் திருவாலங்காடு,திருவாவடுதுறை ஆகிய சிவத்தலங்களையும் தரிசிக்க முடியும். காரைக்காலிலிருந்து கொல்லுமாங்குடி வழியாகக் கும்பகோணம் செல்லும் வழியில் S. புதூரில் இறங்கி, ஆட்டோவிலோ அல்லது மயிலாடுதுறை செல்லும் நகரப் பேருந்திலோ சென்று ஆலயத்தை அடையலாம். வழியில் தேவாரப் பாடல் பெற்ற திருக் கோழம்பம் என்ற தலம் உள்ளது.*

## தலச் சிறப்பு

*கர்ப்பபுரி என்று வடமொழியில் வழங்கப்பட்ட இவ்வூர் தமிழில் கருப்பூர் எனப்பட்டது. கருப்பம் என்ற வடசொல் தமிழில் கருப்பம் என்று வருவதால் இவ்வாறு அழைக்கப்பட்டது. இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன் கர்ப்ப புரீசுவரர் என்றும் , அம்பிகை கர்ப்பப் பிரதாம்பிகை என்றும் வழங்கப்படுகின்றனர். மேலும், அகத்திய முனிவரால் வழிபட்டமையால் சுவாமிக்கு அகஸ்தீசுவரர் என்ற பெயரும் உண்டு. திருவாசகக் குளம் என்று திருக்குளம் அழைக்கப்படுகிறது. இவ்வாறு எங்குமில்லாதபடி இதற்குப் பெயரிடப்பட்டமைக்குக் காரணம் புலப்படவில்லை.*

## கோயில் அமைப்பு

*திருக்கோயில் கிழக்கு நோக்கியது. அம்பிகை சன்னதி தெற்கு நோக்கியது. வடக்கு வாயில் மூலமாக நுழைந்தால், சுவாமி சன்னதியை நோக்கி வீற்றிருக்கும் நந்தியையும் பலிபீடத்தையும் காண்கிறோம். சுவாமி சன்னதி, அர்த்த மண்டபம், கருவறை ஆகியவற்றைக் கொண்டது. கருங்கல் அடித்தளத்துடன் விளங்கும் சன்னதியில், கர்ப்பபுரீசுவர சுவாமி நாகாபரணத்துடன் ருத்ராக்ஷப் பந்தலின் கீழ் அற்புத தரிசனம் வழங்குகிறார். இந்த சன்னதி, ஐந்து படிகளைக் கொண்ட உயர்ந்த மேடையில் அமைந்துள்ளது .சுவாமி சன்னதியை வலம் வந்தபடி, பிராகாரத்தில் அமைந்துள்ள கருக் காத்த கணபதியையும் , வள்ளி - தேவசேனை சமேதரான முருகப் பெருமானையும் தனிச் சன்னதிகளில் நாம் தரிசனம் செய்கிறோம். வடக்கு பிராகாரத்தில் சண்டிகேசுவரர் சன்னதியும் இதற்கு அருகில் ஸ்தல விருக்ஷ மேடையும் இருக்கக் காண்கிறோம். அதன் அருகில் கிழக்கு நோக்கியவாறு சிவலிங்கப் பெருமான் வீற்றிருக்கிறார். ஸ்தல விருக்ஷமாக வில்வம் உள்ளது.*

*கர்ப்பத்தை அருளுவதால் அம்பிகை, கர்ப்பப் பிரதாம்பிகை எனப்படுகிறாள். பெயருக்கேற்ற வரப்ரசாதியான இந்த அம்பிகை, நான்கு அடி உயரத் தோற்றத்தில் மேல் கரங்களில் ஜபமாலையும், நீலோத்பல புஷ்பமும் கொண்டவளாகவும், வலது முன்கரம் அபய முத்திரையோடும், இடது முன்கை தொடையோடு இணைந்தும் (ஊரு ஹஸ்தமாக) காட்சி அளிக்கிறாள். அம்பாள் சன்னதியும் சற்று உயரத்தில் அர்த்த மண்டபம்,கருவறை ஆகியவற்றோடு அழகாக அமைந்துள்ளது.*

*பிள்ளை வரம் வேண்டுபவர்கள் திங்கட் கிழமைகளில் சுவாமியையும் வெள்ளிக் கிழமை மற்றும் பௌர்ணமி தினங்களில் அம்பாளையும் வழிபட்டுப் பலன் பெறுகிறார்கள். தம்பதிகளாக இங்கு வந்து, சுவாமி - அம்பாளுக்கு அபிஷேகம் அர்ச்சனை ஆகியவற்றை செய்து, மாலைகள் சார்த்தி வழிபடுவர். தாய்மை அடைய வேண்டும் பெண்கள் , அம்பாள் சன்னதியைத் தனது கையால் மெழுகிக் கோலமிட்டு நெய் தீபம் ஏற்றி முழுமையான நம்பிக்கையுடன் மனதாரப் பிரார்த்திக்கிறார்கள். அதன் பலனாக மக்கள் செல்வம் அருளப் பெறுவது பலரது அனுபவம்.*

## தேவார வைப்புத் தலம்

*சுந்தர மூர்த்தி நாயனார் நன்னிலம் பெருங்கோயிலை வழிபட்டுத் தேவாரத் திருப்பதிகம் பாடி அருளினார். அப்பதிகத்தில் வரும் ஒரு பாடலில்,*

***கச்சியன்** இன் **கருப்பூர்** விருப்பன் கருதிக் கசிவார்*

*உச்சியன் பிச்சை உண்ணி உலகங்கள் எல்லாம் உடையான்*

*நொச்சியம் பச்சிலையான் நுரை தீர் புனலால் தொழுவார்*

*நச்சிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே.*

என்று பாடுகிறார். இதில் வரும் " கச்சியன் " என்பது இத் தலத்தின் அண்மையில் உள்ள காஞ்சிவாய் என்ற சிவத்தலத்தைக் குறிப்பதாகவும், கருப்பூர் என்பது இத் தலத்தையும் குறிப்பதாகக் கொள்ள வகை உண்டு என்பதால், இத்தலம் தேவார வைப்புத் தலம் எனக் கொள்ளலாம். காஞ்சிவாயில் உள்ள சிவாலயத்தில் காஞ்சிபுரத்தைப் போலவே, சுவாமிக்கு ஏகாம்பரேசுவரர் என்றும் அம்பிகைக்குக் காமாக்ஷி என்றும் திருநாமங்கள் வழங்கப்படுவதைக் காணலாம்.

## ஆலயத் திருப்பணி

பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற இந்த ஆலயம், பல்லாண்டுகளாகப் பராமரிப்பு இல்லாததால், மரங்கள் முளைத்தும் இடிந்தும் காணப்பட்டது. சுவாமி சன்னதி ஒன்றே பாழடைந்த நிலையில் எஞ்சி இருந்தது. பிற சன்னதிகளோ தெய்வத் திருவுருவங்களோ இல்லாதது கண்டு, திருவாதிரையான் திருவருட் சபையின் ( Ardhra Foundation ) பெருமுயற்சியால், இறையருள் துணையுடன் திருப்பணிகள் துவங்கின. அனைத்து சன்னதிகளும் புதிதாகக் கட்டப்பட்டன. தெய்வத் திருவுருவங்களும் புதிதாகச் செய்யப்பெற்றன. பல வெளியூர் அன்பர்களும் , உள்ளூர்வாசிகளும் உதவினர். ஓராண்டுக்கும்குறைந்த கால அளவில் திருப்பணிகள் முழுதும் நிறைவேறி, இத் திருக் கோயிலின் மகா கும்பாபிஷேகம், ஜய ஆண்டு, தை மாதம் 18ம் நாள் ஞாயிற்றுக் கிழமை ( 1.2.2015) திருவாதிரை நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### அருகில் உள்ள தலங்கள்

கருப்பூருக்கு மேற்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் தேவாரப் பாடல் பெற்ற தலமான திருக்கோழம்பமும் ,அதற்குத் தெற்கில் 1.5 கி.மீ. தூரத்தில் குபேரன் வழிபட்ட S புதூரும், அதன் தெற்கில் 3 கி.மீ-ல் திருநல்லம் (கோனே ராஜபுரம்)என்ற பாடல் பெற்ற தலமும் உள்ளன. கருப்பூருக்குவடக்கில் 3 கி.மீ-ல் திருவாவடுதுறையும், திருவாலங்காடும், தென்மேற்கில் தென்குரங் காடுதுறை(ஆடுதுறை)யும், கிழக்கே 2 கி.மீ –ல் பேராவூரும் , 3 கி.மீ-ல் காஞ்சிவாயும் உள்ளன.

## **துதிப் பாடல்கள்**

*( பிள்ளை வரம் வேண்டுவோர், தூய்மையுடன் மனம் ஒன்றி தினமும் பாராயணம் செய்து வரவும்.)*

திருச்சிற்றம்பலம்

### **திருவெண்காடு- சம்பந்தர் தேவாரம்**

பேய் அடையா ;பிரிவு எய்தும்; **பிள்ளையினோடு உள்ள நினைவு**

**ஆயினவே வரம் பெறுவர் ; ஐயுற வேண்டா ஒன்றும்**

வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்

தோயாவாம் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

### **திட்டை-சம்பந்தர் தேவாரம்**

**கருவினால் அன்றியே கருவெலாம் ஆயவன்**

**உருவினால் அன்றியே உருவு செய்தான்** இடம்

பருவ நாள் விழவொடும் பாடலோடு ஆடலும்

திருவினான் மிகு புகழ்த் தென்குடித் திட்டையே.

### **திருக்கருகாவூர்- திருநாவுக்கரசர் தேவாரம்**

மூலனாம் மூர்த்தியாம் முன்னேதானாம்

மூவாதமேனி முக்கண்ணி னானாம்

சீலனாம் சேர்ந்தார் இடர்கள் தீர்க்கும் செல்வனாம்

செஞ்சுடர்க்கு ஓர் சோதி தானாம்

மாலனாம்; மங்கை ஓர் பங்கன் ஆகும்; மன்றாடியாம்

வானோர் தங்கட்கெல்லாம்

காலனாம் காலனைக் காய்ந்தானாகும்

கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.

**திருச்சிராப்பள்ளி -திருநாவுக்கரசர் தேவாரம்**

*தாயுமாய் எனக்கே தலை கண்ணுமாய்*

*பேயனேனையும் ஆண்ட பெருந்தகை*

*தேய நாதன் சிரப்பள்ளி மேவிய*

*நாயனார் என நம் வினை நாசமே.*

**தில்லை- மாணிக்கவாசகர் திருவாசகம்**

*உருத்தெரியாக் காலத்தே உள் புகுந்து என் உள மன்னிக்*

*கருத்திருத்தி ஊன் புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட*

*திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை*

*அருத்தியினால் நாயடியேன் அணி கொள் தில்லை கண்டேனே.*

*திருச்சிற்றம்பலம்*

**கந்தர் அநுபூதி- அருணகிரிநாதர்**

**உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**

**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்**

**கருவாய் உயிராய் கதியாய் விதியாய்**

**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.**

*கருப்பூர் சிவாலய தரிசனம் செய்ய வேண்டுவோர், மேலும் விவரங்களை, 9842772175 என்ற எண்ணில் தொடர்பு கொள்வதன் மூலம் அறிந்து , ஆலய வளர்ச்சிக்கு உதவி இறைவன் அருள் பெறலாம்.*

## முக்கிய வேண்டுகோள்

பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஆலயத்திற்குகும்பாபிஷேகம் நடைபெறுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நித்திய பூசைகளும் விழாக்களும் முறைப்படி நடை பெறச் செய்வதாகும்.. இதற்காக,ஒரு வைப்பு நிதி அமைக்கப் பெறுதல் அவசியம்.

ஆலய சிப்பந்திகள் கிராமக் கோயில்களில் மிகக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். ஊராரும், அரசாங்கமும் இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நில வருவாய் குறைந்துவிட்ட இக்காலத்தில், வெளி ஊரிலுள்ள அன்பர்களின் ஆதரவால் மட்டுமே திருப்பணிகளைச் செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாத வருமானத்தில் ஒரு சிறு பகுதியையாவது சிவாலயத் திருப்பணிக்கு அளிக்க முன்வர வேண்டும்.

இல்லங்களில் சுப காரியங்கள் நடைபெறும் போது அதற்காகும் செலவில் ஒரு சிறிய பகுதியை சிவாலய நித்திய பூஜைக்காக அளிக்க முன்வைஷவண்டும்.

நகரங்களில் உள்ள அன்பர்கள் அருகிலுள்ள கிராமக் கோயில்களுக்குச் சென்று எண்ணெய்,புஷ்பம் போன்றவற்றை அளிப்பதோடு, அர்ச்சகருக்கு இயன்ற அளவு சம்பாவனை வழங்க வேண்டும்.

இவ்வழிபாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்தி நல்வழி காட்ட வேண்டும். விபூதி ருத்ராக்ஷம் போன்ற சமயச் சின்னங்களை அணியச் செய்ய வேண்டும்.

உழவாரப் பணி செய்து ஆலயத்தின் பிரகாரங்களிலும் விமானங்களிலும் மரங்கள் வளர்வதைத் தடுக்க வேண்டும்.

ஆலயத்தையும் திருக்குளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பாரம்பர்ய உடை அணிந்து ஆலய தரிசனத்திற்குச் செல்ல வேண்டும்.

தெய்வத் திருமேனிகளைத் தீண்டாது, வழிபாடு செய்ய வேண்டும்.

அபிஷேகத்திற்குப் பசுவின் பாலையே பயன்படுத்த வேண்டும்.

நந்தவனம் அமைத்து, வில்வம்,கொன்றை,வன்னி போன்ற மரங்களையும், அரளி,நந்தியாவட்டை,மல்லிகை,முல்லை,விருட்சி போன்ற மலர்ச் செடிகளையும் வைத்துப் பராமரித்து, பூஜைக்குப் பயன் படுத்த வேண்டும்.

நித்திய மற்றும் வார வழிபாட்டுக் குழுக்கள் ஊர் தோறும் அமைக்கப் படவேண்டும்.